**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்**

**IA. 2/2023 in O.S. 292/2014**

**எ.ம.சா. 1 - ஆரோக்கிய ரவி செல்வன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 20.11.2025.**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.**

என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் இம்மனுவில் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் என்றால் சரிதான். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் கதவு எண் ஏதேனும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் தற்போது வசித்து வரும் முகவரி என்ன என்றால் கதவு எண்.2/172, பள்ளம் தோட்டம், பிச்சைகுடியிருப்பு, ஜேம்ஸ்டவுண் அஞ்சல். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மனு எண்.2/2023 நான் தாக்கல் செய்த எதிருரை என்றால் சரிதான். மேற்படி எதிருரையில் குறிப்பிட்டுள்ள கதவு எண்ணும் நான் தற்போது மேற்படி சாட்சியளித்த கதவு எண்ணும் வேறுவேறு என்றால் சரிதான். நான் மேற்படி குறிப்பிட்டிருக்கும் கதவு எண்.2/172 ல் எத்தனை ஆண்டுகளாக வசித்து வந்தேன் என்றால் பிறந்ததில் இருந்து சுமார் 40 வருடங்களாக இருந்தேன். எனது பிறந்த தேதி 12.04.1975. நான் பாஸ்போட் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். எனது பாஸ்போட்டில் என்ன முகவரி உள்ளது என்றால் கதவு எண் நியாபகம் இல்லை மேற்படி குறிப்பிட்டுள்ள முகவரிதான் உள்ளது.

வழக்கு பட்டிகை சொத்து எந்த கதவு எண்ணில் உள்ளது என்றால் 2/190. எனக்கு ஆதார்கார்டு உள்ளதா என்றால் உள்ளது. ஆதார்காட்டின் நம்பர் தெரியுமா என்றால்

நியாபகம் இல்லை. ஆதார்கார்டில் உள்ள முகவரி கதவு எண்ணுடன் கூற முடியுமா என்றால் கதவு எண் நியாபகம் இல்லை பள்ளம் தோட்டம், பிச்சைகுடியிருப்பு, ஜேம்ஸ்டவுண் அஞ்சல். பிரதிவாதியான எனது தகப்பனாருடன் எத்தனை வருடமாக சேர்ந்து வசித்து வருகிறேன் என்றால் 12.09.2021ல் அவர் காலஞ்சென்று விட்டார் நான் தற்போது வெளிநாட்டில் வெளிநாட்டில் பணியாற்றி வருகிறேன் பிறந்ததில் இருந்து சுமார் 40 வருடமாக எனது தந்தையுடன் வசித்து வந்தேன். நான் வெளிநாட்டில் இருக்கும் போது எனது தகப்பனாருடன் பேசுவேனா என்றால் பேசுவேன். அவ்வாறு பேசும் சமயங்களில் தாவா சொத்தின் பிரச்சனை குறித்து எனது தகப்பனார் பேசினாரா என்றால் பேசியுள்ளார். இவ்வழக்கு சம்மந்தமாக தொலைபேசியில் பேசியுள்ளாரா என்றால் ஆம் நேரடியாகவும் பேசியுள்ளார். எனக்கு இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் நடப்பது குறித்து தெரியுமா என்றால் நாகர்கோவில் நீதிமன்றம் என்று தெரியும்.

14.07.2025 அன்று நான் எங்கு இருந்தேன் என்றால் ரஜகிருஷ்ணாபுரத்தில் எனது வீட்டில் இருந்திருப்பேன் என்று நினைக்கிறேன். அன்றைய தினம் எனது வீட்டில் என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் எனது மனைவி சகாய லின்சி. வழக்கு பட்டிகை சொத்தின் அருகில் எனக்கு வேறு ஏதேனும் வீடு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி மற்றொரு வீட்டின் கதவு எண் என்ன என்றால் கதவு எண் நியாபகம் இல்லை ரஜகிருஷ்ணாபுரம், போஸ்டுஆபீஸ் தெரு, திருநெல்வேலி மாவட்டம் வழக்கு பட்டிகை சொத்தின் அடுத்த தெருவில் தான் மேற்படி வீடும் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்திற்கும் மேற்படி வீட்டிற்கும் எத்தனை அடி தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும். 14.07.2025 அன்று பகல் நேரத்தில் நான் யாருடன் எங்கே இருந்தேன் என்றால்

எனக்கு நியாபகம் இல்லை. 14.07.2025 அன்று இந்தியாவில் வழக்குபட்டிகை சொத்து இருக்கும் இடத்திற்குள் தான் இருந்தேன் என்றால் நியாபகம் இல்லை. மேற்படி திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கும் வீட்டில் யார் தற்போது குடியிருந்து வருகிறார் என்றால் நான் தான் குடியிருந்து வருகிறேன். மேற்படி திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சொத்து எனது கைவசம் வந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் விலைக்கு வாங்கினேன் வருடம் நியாபகம் இல்லை.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் DME மற்றும் B.Tech படித்துள்ளேன். நான் எத்தனை வருடங்களாக வெளிநாட்டில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் 1999 ல் இருந்தே. தாவா சொத்தில் 1999 ம் வருடத்தில் இருந்து நான் அதிகநாட்கள் குடியிருப்பது இல்லை என்றால் ஒரு வருடத்தில் பாதி நாட்கள் இங்கு தான் இருப்பேன். நான் தற்போது தொடர்ச்சியாக குடியிருந்து வரும் முகவரி என்ன என்றால் கதவு எண் நியாபகம் இல்லை ரஜகிருஷ்ணாபுரம், போஸ்டுஆபீஸ் தெரு, திருநெல்வேலி மாவட்டம். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் ஏன் கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆதார் அட்டையில் உள்ள முகவரியை குறிப்பிட்டுள்ளேன். ஆதார் அட்டையில் உள்ள முகவரியில் தான் நான் தற்போது குடியிருந்து வருகிறேனா என்றால் இல்லை. இந்த வழக்கு நிலுவையில் இருப்பதாக யார் மூலமாக எப்போது தெரியவந்தது என்றால் 2014 ம் வருடம் வழக்கு தாக்கல் செய்தார்கள் 2016 ம் ஆண்டு வழக்கு தள்ளுபடியானது 2020 ம் ஆண்டு வாதியின் பேத்தியை வாதியின் வழக்கறிஞர் திருமணம் செய்து கொண்டார் 2020 ல் மறுபடியும் வழக்கு கோப்புக்கு வாதியின் பேரன் மூலமாக எடுக்கப்பட்டது.

2014 ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்த விபரம் எப்போது தெரியும் என்றால் 2014 ம்

ஆண்டே தெரியும். 2014 ம் வருடம் வழக்கு தாக்கல் செய்தபோது நான் வழக்கின் தரப்பினராக இருந்தேனா என்றால் இல்லை. 2014 ம் ஆண்டு எனது தந்தையார் வழக்கின் தரப்பினராக இருந்த போது எனக்கு வழக்கு குறித்து தெரியும் என்றால் சரிதான். எனது தகப்பனார் காலஞ்சென்ற விபரத்தை நான் ஏன் நீதிமன்றத்தில் கூறவில்லை என்றால் கூறியுள்ளோம். மேற்படி விபரங்கள் எனக்கு தெரிந்தும் நான் எனது தந்தையார் காலஞ்சென்ற பின்னர் வழக்கறிஞரை எப்போது நீதிமன்றத்தில் சந்தித்தேன் என்றால் 2021ல் தகப்பனார் காலஞ்சென்றார் அதன் பின்னர் 2023 ல் தான் செய்தித்தாள் மூலமாக கிடைத்தது பின்பு வழக்கறிஞர் மூலமாக நீதிமன்றத்திற்கு வந்தேன். 2014 ம் ஆண்டு தாக்கல் செய்த வழக்கு சம்மந்தமாக 2021ல் எனது தகப்பனார் இறந்த பின்பு வழக்கு சம்மந்தமாக என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் எதுவும் எடுக்கவில்லை எனது தந்தையாரின் வழக்கறிஞர் எனது தந்தையார் இறந்த விபரத்தை நீதிமன்றத்திற்கு தெரியபடுத்தினார். எனது தந்தையாரின் வழக்கறிஞர் எனது தந்தையார் இறந்த விபரத்தை நீதிமன்றத்திற்கு தெரியபடுத்திய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

மேற்படி விபரம் எவ்வாறு தெரியவந்தது என்றால் எனது தகப்பனாரின் வழக்கறிஞர் மூலமாக அறிந்து கொண்டேன். மேற்படி எனது தகப்பனார் இறந்த விபரத்தை நீதிமன்றத்தில் தெரியவந்த பின் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி எனது தகப்பனார் இறந்த விபரத்தை நீதிமன்றக்கு தெரியவந்ததன் பின்பு எத்தனை முறை வழக்கறிஞரை சந்தித்தேன் என்றால் சந்திக்கவே இல்லை. மேற்படி கூறியபடி செய்திதாளில் அறிவிப்பு வந்தபின்பு தான் சந்தித்தேன். மனு எண். 2/23 தாக்கல் செய்தது எதன் மூலம் தெரியவந்தது என்றால்

வழக்கறிஞர் கூறியதன் பேரில் தெரிய வந்தது. மேற்படி மனு பற்றி நேரடியாக எனக்கு எவ்வித விபரம் தெரியாது என்றால் சரிதான். மேற்படி மனு குறித்த அறிவிப்பு எந்த நாளில் எந்த செய்திதாளில் வந்ததாக கூறினார்கள் என்றால் தெரியாது ஞாபகம் இல்லை. நான் தொலைபேசி உபயோகித்து வருகிறேனா என்றால் உபயோகித்து வருகிறேன். நான் தற்போது பயன்படுத்தும் தொலைபேசி ஆன்ராய்டு தொலைபேசி என்றால் சரிதான். நீதிமன்ற நடவடிக்கைகளை தொலைபேசி மூலமாக இதுவரையில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் மனுவில் கூறியிருக்கும் ரஜகை (ரஜகிருஷ்ணாபுரம்) ஆலயம் எனது வீட்டில் இருந்து எந்த திசையில் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் தற்போது குடியிருந்து வரும் வீடு அடுத்த தெருவில் மேற்படி ஆலத்திற்கு வடக்கு பக்கம் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்தில் இருந்து ரஜகை (ரஜகிருஷ்ணாபுரம்) ஆலயம் எந்த திசையில் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் வழக்கு பட்டிகை சொத்தில் இருந்து சுமார் 100 மீட்டர் தூரம் மேற்கு பக்கத்தில் உள்ளது.

எ.ம.சா.ஆ.1 நான் தாக்கல் செய்தது என்றால் சரிதான். மேற்படி எ.ம.சா.ஆ.1 பென்டிரைவ் என்னுடையதா என்றால் நான் கடையில் வாங்கியது. மேற்படி பென்டிரைவ்வை எங்கே எப்போது வாங்கினேன் என்றால் 30.10.2025 அல்லது 31.10.2025 அன்று இருக்கும். மேற்படி பென்டிரைவ்வை வாங்கியதற்கான ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் link ஒன்று குறிப்பிட்டுள்ளேன் அது எப்போது எங்கு வைத்து யாருடைய லேப்டாப்பில் எடுக்கப்பட்டது என்றால் எனது ஸ்மாட்போனில் தான் பார்த்தேன் பின்பு லினோவா லேப்டேப்பில் இருந்து பதிவிறக்கம் செய்தேன். மேற்படி link குறித்து எனக்கு எப்போது

தெரியவந்தது என்றால் எங்கள் ஊரில் ரஜகை யூடியூப் சேனலில் ஞாயிறு மற்றும் இதர நாட்களில் நடைபெறும் ஆலயவிழாக்களை நேரடியாக ஒளிபரப்பு செய்வார்கள் அதன் மூலம் தெரிந்து கொண்டேன். மேற்படி link நேரடியாக ஒளிபரப்பிற்குரியதா அல்லது பதிவு செய்யப்பட்ட வீடியோ உடையதா என்றால் பதிவு செய்யப்பட்ட வீடியோவின் link.

மேற்படி link ஆனது எந்த தேதியில் நடந்த நிகழ்வுகளை காட்டுகிறது என்றால் 14.11.2021, 07.12.2021 மற்றும் 26.12.2021 க்கான வீடியோக்கள். மேற்படி link மேற்படி தேதிக்கான ஒளிப்பதிவிற்கானது என்பதை காண்பிப்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம் புகைப்படத்தில் உள்ளது. மேற்படி நான் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் பதிவேற்றம் செய்ததற்கான தேதி உள்ளது என்றால் சரிதான். பொதுவாக நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படும் வீடியோக்கள் அப்போதே பதிவேற்றமும் செய்யப்படும். மேற்படி புகைப்படத்தில் பதிவேற்றம் செய்ததற்கான தேதி மட்டும் உள்ளது ஆனால் என்று ஒளிப்பதிவு செய்யப்பட்டது என்பதற்கான தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல தற்போது link யை பார்த்தாலும் மேற்படி வீடியோ காணப்படும். எ.ம.சா.ஆ.1 மற்றும் 2 யை நிரூபிப்பதற்கு அதனை ஏற்படுத்தியவரின் சான்றொப்பம் உள்ளதா மேலும் அவரை சாட்சியாக விசாரித்துள்ளோமா என்றால் அது பொதுவெளியில் காணப்படும் ஒளிப்பதிவு என்பதால் அவசியமில்லை. எ.ம.சா.ஆ.1 யை பதிவு செய்தவர்களை நான் அணுகியுள்ளேனா என்றால் இல்லை.

நான் நேரடியாக பதிவு செய்யாத ஒரு ஆவணத்தை பொறுத்து அதற்கான பரிவு 65B சான்றிதழ் தாக்கல் செய்தது சரியல்ல என்றால் சரியல்ல. செயின்ட் ஆன்ஸ் சர்ச்சில் நான் உறுப்பினராக இருக்கிறேன் என்றால் இருக்கிறேன். மேற்படி சர்ச்சில் சர்டே மாசின் போது

சுமார் எத்தனை பேர் கலந்து கொள்வார்கள் என்றால் சுமார் 200 பேர் வருவார்கள். மேற்படி சர்ச்சில் திருவிழா காலங்களில் எத்தனை பேர் கலந்து கொள்வார்கள் என்றால் சுமார் 1000 நபர்கள் கலந்து கொள்வார்கள். மேற்படி 1000 நபர்களில் 600 நபர்கள் ஆன்டிராய்டு தொலைபேசி பயன்படுத்துவார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1000 பேர் கலந்து கொள்ளும் திருவிழாவின் போது எடுக்கப்பட்ட ஒளிப்பதிவில் ஐந்து வருடங்கள் ஆகியும் 185 நபர்கள் தான்மேற்படி வீடியோவை பார்த்துள்ளார்கள் என்பது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல மேற்படி புகைப்படம் 2021ல் ஒளிப்பதிவு செய்யப்பட்டது தற்போது ஸ்கிரீன்ஷாட் செய்யப்பட்டது  தற்போது கூடுதல் நபர்கள் பார்த்திருப்பார்கள். எ.ம.சா.ஆ.1 புகைப்படம் 1 எந்த தேதியில் ஸ்கிரீன் ஷாட் செய்யப்பட்டது என்றால் 31.10.2025. மேற்படி எ.ம.சா.ஆ.1 புகைப்படம் 1  எத்தனைபேர் பார்த்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 181. எ.ம.சா.ஆ.1 புகைப்படம் 31.10.2025 அன்று ஸ்கிரீன் ஷாட் எடுத்த போது 181 நபர்கள் தான் பார்த்துள்ளார்கள் என்றால் சரிதான்.

இம்மனு சம்மந்தமாகவும் இவ்வழக்கு சம்மந்தமகவும் ஆதியில் இருந்தே அனைத்து விபரங்களையும் தெள்ளத்தெளிவாக தெரிந்து கொண்டு இந்த வழக்கை நீத்துபோக செய்ய வேண்டும் என்ற தீய எண்ணத்தில் நாளது தேதிவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் காலஞ்சென்ற பின்பும் இம்மனு சம்மந்தமாகவும் இவ்வழக்கு சம்மந்தமகவும் அனைத்து விபரங்களையும் உற்று  நோக்கிக் கொண்டு இந்நீதிமன்றத்தின் நேரத்தையும் வாதியின் நேரத்தையும் வீணடித்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்மந்தமாக அனைத்து விபரங்களையும் தெரிந்து கொண்டே நீதிமன்றத்தை ஏமாற்றி விட்டீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி கூறிய

விபரங்களில் ஏதேனும் பொய் என்று நீதிமன்றத்தின் முன்பு நிரூபிக்கப்பட்டால் அதற்கு என் மீது குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் மறுவிசாரணை.**

நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் குறிப்பிட்டிருக்கும் 26.12.2021 அன்று நடைபெற்ற திருவிழா திருக்குடும்ப சபை திருவிழா.

**மறுவிசாரணை முடிக்கப்படுகிறது.**

**மீண்டும் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் தாக்கல் செய்துள்ள அனைத்து புகைப்படங்களும் பொய்யானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தின் தேதிகள் 14.11.2021, 07.12.2021 மற்றும் 26.12.2021 ஆகிய தேதிகளில் நான் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எதிராக வழக்கு திரும்புவதை தெரிந்து கொண்டு நான் பொய்யாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் சாட்சியங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து URL மற்றும் புகைப்படங்கள் அனைத்தும் ஆதிகாலத்திலேயே பதிவு செய்யப்பட்ட வீடியோ காட்சிகளை வேறொரு ஒளித்திரையில் பதிவிட்டு அதனை லைவ் டெலிகாஸ்டில் இருந்து எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மையாகவே ஆலய யூடியூப் சேனலில் இருந்து எடுத்திருந்தால் கோவில் நிர்வாகிகளின் சாட்சியங்களை இந்நீதிமன்றத்தின் முன்பு சமர்ப்பித்திருப்பேன் என்றால் சரியல்ல. ஒரு கோவிலில் எடுக்கப்பட்ட video வை கோவில் நிர்வாகத்தினரின் அனுமதியில்லாமல் தனது எலக்ரானிக் gadgets ல் பதிவிறக்கம் செய்தது

தவறு என்றால் சரியல்ல. நான் சமர்ப்பித்த ஆவணங்கள்அனைத்தும் AI மற்றும் அதிநவீன மென்பொருள் மூலமாக Fabricate செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தன்னிச்சையாகவே எனது மொபைல் போனில் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்திற்கும் நானே சாட்சியாக நிற்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**